# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093840

1. District : THANJAVUR PS: VIGILANCE & ANTI-CORRUPTION Year: 2020 FIR No. 03/2020 Date: 06-03-2020
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7, 7-A and 12 of PC (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: as Amended Prevention of Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : U/s 102 Cr.P.C

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 05-03-2020 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : 18.00 Hrs Time to : 23.00 Hr
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 06-03-2020 Time : 04.00 Hr
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 04.00 Hr
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 35 km South from P.S
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Sub-Registrar Office, Peravurani, Thanjavur (Dt)
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Gajendran (b) Father's/ Husband's Name : V. Krishnamoorthy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : Abb (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Deputy Inspection cell officer (g) Address : Thanjavur
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) S.E. Vasudevan, Sub-Registrar, Peravurani, Thanjavur (Dt)
2) S. Sudhakar s/o Soundararajan, Document Writer, Peravurani, Thanjavur (Dt)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
NIL

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து அனுப்பப்பட்டது:

இன்று 06.03.2020ம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு, தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளராகிய நான், நிலைய பொறுப்பில் இருந்தபொழுது தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு :-05.03.2020 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை பேராவூரணி சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்வதற்கு சார் பதிவாளரும், சார்பதிவாளர் அலுவலக ஊழியர்களும் கையூட்டு பெறுவதாக, தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரான K.கஜேந்திரன் (வட்டாட்சியர்) ஆகிய எனக்கு கிடைத்த தகவலின் பேரில், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு சென்று தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன் அவர்களிடம் தகவல் தெரிவித்தும், அதன்பின்னர் (05.03.2020) மாலை 16.15 மணிக்கு தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து

PTO-3

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ............ Rank ............ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ...V. சந்திரா... பதவி ...இன்ஸ்பெக்டர்... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

K. GAJENDRAN

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

06/03/2020

15. Date & Time of despatch to the court: 06-03-2020 06-00 Hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. MANOHARAN
Rank: நிலை DSP VAC Thanjavur No. எண் ..........

இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு, மாலை 18.00 மணிக்கு பட்டுக்கோட்டை உதயசூரியபுரம் to பேராவூரணி ரோட்டில் இடதுபுறம் அமைந்துள்ள மேற்கு பார்த்த மாடிக்கட்டிடமான பேராவூரணி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு நானும், தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணைக் காவல் கண்காணிப்பாளர் திரு.S.மனோகரன், திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர் மற்றும் தஞ்சாவூர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சென்று, அங்கு பணியில் இருந்த சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் அவர்களிடமும் மற்றும் மேற்படி அலுவலகத்தில் பணி செய்து கொண்டிருந்த அலுவலர்களிடமும் திடீர் சோதனை பற்றிய தகவல் தெரிவித்து, திடீர் சோதனை மேற்கொண்டபோது தயார் செய்யப்பட்ட நடவடிக்கை விபரம் கீழ்கண்டவாறு.

<u>இந்த திடீர் சோதனையின்போது மாவட்ட ஆய்வுக் குழுவினர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்.</u>

1) திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
2) திரு.S.மனோகரன், துணைக் காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.
3) திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

<u>இந்த திடீர் சோதனையின்போது பேராவூரணி சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களிடம் சோதனையிட்ட விபரம் பின்வருமாறு.</u>

பேராவூரணி சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் அவர்களை விசாரித்தபோது அவர் தான் காலையில் ரூ.1,000/- பணம் வீட்டில் இருந்து எடுத்து வந்ததாகவும், அதனை தனி நபர் பணப்பதிவேட்டில் பதிவு செய்துள்ளதாகவும், அதில் செலவு போக மீதம் ரூ.500/- உள்ளது என்று எடுத்து ஆஜர் செய்தார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்படி பணம் ரூ.500/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது வலது கையில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் வைத்திருந்த கைப்பையை பற்றி கேட்டபோது அவர் பதட்டத்துடன், தென்னங்குடி அ.சே.அடைக்கலம், BDO(Rtd) (முத்திரைத்தாள் விற்பனையாளர்) அவர்கள் நினைவாக என்று அச்சிடப்பட்டிருந்த மேற்படி அவரது வலது கையில் பிடித்து வைத்திருந்த வயலட் மற்றும் பழுப்பு நிறம் கொண்ட ரெக்சின் பேக்கில் இருந்த ரூ.1,92,400/- பணத்தை எடுத்து ஆஜர் செய்து, மேற்படி பணம் இன்று பத்திரம் பதிவு செய்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் பெற்று வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். மேலும் அவர் நடைமுறையில் கிரய ஆவணங்கள் பதிவு செய்பவர்கள் கொடுக்கும் பணத்தையும், ஆவண எழுத்தர்கள் கொடுக்கும் பணத்தையும் வாங்குவது

தவிர்க்க முடியாது என்றும் அது நடைமுறைதான் என்றும் கூறினார். அவர் வைத்திருந்த மேற்படி பணத்தின் விவரம் கீழ்வருமாறு:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2,000 | 28 | 56,000.00 | 1,92,400.00 |
| 500 | 271 | 1,35,500.00 | |
| 200 | 2 | 400.00 | |
| 100 | 4 | 400.00 | |
| 50 | 2 | 100.00 | |

மேற்படி பணம் மற்றும் பணம் வைத்திருந்த வயலட் மற்றும் பழுப்பு நிறம் கொண்ட ரெக்சின் பேக் ஆகியவை மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அருகில் இடதுபுறம் முன்பக்கமாக கையில் அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற துணிப்பையை வைத்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் சுதாகர் என்றும் தான் திருவேங்கடம் தெரு பழைய பேராவூரணியில் வசிப்பதாகவும், ஆவண எழுத்தராக உள்ளதாகவும் தெரிவித்தார். அவரது ஆவண எழுத்தர் உரிம எண்.B-987/PKT/1991 என்றும் தெரிவித்தார். மேலும் அவர் தான் இன்று 9 கிரய ஆவணங்கள் பதிவு செய்ய ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்ததாக தெரிவித்தார். அவரிடம் உள்ள பணம் பற்றி கேட்க, அவர் பதட்டத்துடன் அவரது வலது கையில் வைத்திருந்த அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற துணிப்பையில் இருந்து ரூ.1,03,180/- (கீழ்கண்ட விவரப்படியான) ஐ எடுத்து ஆஜர் செய்து, அது இன்று தான் பத்திரம் பதிவு செய்தவர்களிடம் இருந்து கையூட்டாக பெற்று சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் அவர்களிடம் கொடுப்பதற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். மேற்படி சுதாகர் வைத்திருந்த பணத்தின் விவரம் கீழ்வருமாறு:

| Rs. | No's | Total Amount | Grand Total |
|---|---|---|---|
| 2,000 | 12 | 24,000.00 | 1,03,180.00 |
| 500 | 152 | 76,000.00 | |
| 200 | 11 | 2200.00 | |
| 100 | 9 | 900.00 | |
| 50 | 1 | 50.00 | |
| 10 | 3 | 30.00 | |

மேற்படி பணம் மற்றும் பணம் வைத்திருந்த அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயம் என்று அச்சிடப்பட்ட மஞ்சள் நிற துணிப்பை ஆகியவை மேல் நடவடிக்கைக்காக மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.சுதாகர் த/பெ.சௌந்தர்ராஜன் என்பவர் வைத்திருந்த மேற்படி கையூட்டு தொகை தொடர்பாக அவரிடம் விசாரித்து, தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

மேலும் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரே கண்ணாடியால் தடுக்கப்பட்டிருந்த கம்ப்யூட்டர் அறையில் கம்ப்யூட்டரில் அமர்ந்து பணி செய்துகொண்டிருந்த S.கிருஷ்ணமூர்த்தி, S/o.சி.சுப்பிரமணியன் என்பவரை விசாரித்தபோது, அவர் தான் TCS நிறுவனத்தில் இருந்து மாதம் ரூ.5505/- தொகுப்பூதியத்தில் Scan செய்தல், போட்டோ எடுப்பது, Online நகல் எடுத்து கையெழுத்து வாங்குதல் போன்ற பணிகளை செய்வதாகவும், தனது வீடு அலுவலகத்திற்கு அருகிலேயே உள்ளதால் செலவுக்கு பணம் எதுவும் எடுத்து வந்து வைத்திருக்கவில்லை என்றும் கூறினார்.

மேலும் சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் அவர்களிடம் இன்றைய பதிவு விவரங்கள் பற்றி விசாரிக்க இன்று மொத்தம் 19 கிரய ஆவணங்களும், 1 MOD ஆவணமும், 2 செட்டில்மெண்ட் ஆவணங்களும், 2 ரத்து ஆவணமும் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், அதன்படி மேற்படி 24 ஆவணங்களுக்கும் ரூ.3,49,374/- E-Payment மூலம் பதிவு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், இன்று நடைபெற்ற 3 தமிழ்நாடு திருமண பதிவிற்கு ரூ.330/-ம் POS மூலம் செலுத்தப்பட்டுள்ளது என்றும், பிரிவு 41ன் படி 24 ஆவணங்களுக்கு செலுத்தப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வை ரூ.13,646/- Online மூலமாகவும் POS மூலமாக ரூ.792/-ம், CD கட்டணமாக ரூ.2300/- Online மூலமாகவும் POS மூலமாக ரூ.600/-ம், உட்பிரிவு கட்டணம் ரூ.400/- Online மூலமாகவும் POS மூலமாக ரூ.480/-ம் பணம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். மேலும் அவை தவிர பணம் எதுவும் பதிவிற்காக வசூலிக்கப்படுவதில்லை என்றும் தெரிவித்தார்.

இந்த திடீர் சோதனை நடவடிக்கையின் தொடர்ச்சியாக மேற்கண்டவாறு சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் ஆவண எழுத்தர்களிடமும், பத்திரம் பதிவு செய்தவர்களிடமும் நேரடியாக பெற்று வைத்திருந்த ரூ.1,92,400/- மற்றும் சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் என்பவருக்கு பத்திர பதிவு செய்ததற்காக கொடுக்க திரு.சுதாகர் த/பெ.சௌந்தர்ராஜன் என்பவர் வைத்திருந்த ரூ.1,03,180/- ஆக மொத்தம் **ரூ.2,95,580/-** யையும் மேற்படி பேராவூரணி சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் மற்றும் திரு.S.சுதாகர் த/பெ.சௌந்தர்ராஜன் ஆகியோர் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திர பதிவிற்கு வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், உரிமைகோராத பணம் மற்றும் அவ்வாறு குற்றமுறு நடவடிக்கையின் மூலம் சார் பதிவாளர் S.E.வாசுதேவன் அவர்களுக்கு கொடுக்கவந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரிலும் நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது.

மேலும் போராவூரணி சார் பதிவாளர் அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேடு-1, TCS பணியாளர்களுக்குரிய வருகை பதிவேடு-1 மற்றும் போராவூரணி சார் பதிவாளர் அலுவலக அலுவலர்களின் தனி நபர் பணப் பதிவேடு 2020 - 1, ஆகியவை நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் சார் பதிவாளர் வாசுதேவன் மேற்படி வருகைப்பதிவேட்டில் 05.03.2020 ந்தேதியிலும் தவறுதலாக 06.03.2020 ந் தேதியிலும் சுருக்கொப்பமிட்டு விட்டதாக கூறினார். மேலும் அலுவலக உதவியாளர் திருமதி.சரோஜா என்பவர் மாலை 05.45 மணிக்கு வீட்டுக்கு சென்றுவிட்டார் என்று கூறினார். மேலும் Cable Operator திருமதி.பாப்பம்மாள் என்பவரும் மாலை 05.45 மணிக்கு வீட்டுக்கு போய்விட்டார் என்று கூறினார். மேலும் இன்று பதிவு செய்யப்பட்ட 24 ஆவணங்களில் 19 கிரய ஆவணங்கள், 1-MOD, 2 செட்டில்மெண்ட், 2 ரத்து ஆவணத்தின் நகல் மற்றும் 3 தமிழ்நாடு திருமண பதிவு, பிரிவு 41ன் படி 24 ஆவணங்களுக்கு செலுத்தப்பட்ட குறைவு முத்திரைத் தீர்வை, CD கட்டணம், உட்பிரிவு கட்டணம் ஆகியவற்றின் விவரம் குறித்து கம்ப்யூட்டர் பிரிண்ட் எடுத்து சார் பதிவாளர் சான்றொப்பமிட்டு கொடுத்த மேற்படி ஆவணங்கள் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் மற்றும் மகஜர் **05.03.2020** ந் தேதி **23.00** மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே மேற்படி சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவன் பத்திரம் பதிவு செய்ய வந்தவர்களிடமும், ஆவண எழுத்தர்களிடமும், குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.1,92,400/- மற்றும் (2) சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்த ஆவண எழுத்தர் திரு.சுதாகர் த/பெ.சௌந்தர்ராஜன் என்பவரிடமிருந்த குற்றமுறு நடவடிக்கை மூலம் பெற்று வைத்திருந்த பணம் ரூ.1,03,180/- ம் ஆகக் கூடுதல் **ரூ.2,95,580/-** யையும் மேற்படி போராவூரணி சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவனும் மற்றும் ஆவண எழுத்தர் திரு.சுதாகர் என்பவரும் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பத்திரம் பதிவிற்கு வந்தவர்களிடமும், பத்திர எழுத்தர்களிடமும் கையூட்டாக கேட்டு பெற்ற பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலும், உரிமைகோராத பணம் மற்றும் அவ்வாறு குற்றமுறு நடவடிக்கையின் மூலம் பெற்ற கையூட்டு தொகை மற்றும் ஆவண எழுத்தர் திரு.சுதாகர் சார் பதிவாளர் திரு.S.E.வாசுதேவனுக்கு கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் பேரிலும், மேலும் அரசு கணக்கில் காட்டப்படாத பணமாக இருப்பதாலும் மேற்படி (1) திரு.S.E.வாசுதேவன், சார் பதிவாளர், போராவூரணி, தஞ்சாவூர் மாவட்டம் (2) திரு.சுதாகர் த/பெ.சௌந்தர்ராஜன், ஆவண எழுத்தர், போராவூரணி ஆகியோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. Sd.K.Kajendiran.06.03.2020.

Sir.

The above mentioned petition with seized money in the proceedings cum Mahazar has been received from the Deputy ICO, Thanjavur on 06.03.2020 at 04.00 hrs. and registered as a case in Thanjavur V&AC Crime No.03/2020 U/s.102 Cr.PC and 7 of Prevention of Corruption Act 1988 as Amendment of Prevention of Corruption (Amendment) Act 2018 and 7-A and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 by me on 06.03.2020 at 04.30 hrs -Sd- S.Manoharan, DSP (V&Ac), Thanjavur.06.03.2020.

முதல் தகவல் அறிக்கையின் அசலையும் மற்றும் திடீர் ஆய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றையும் கும்பகோணம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்றை நிலைய கோப்பிவில் வைக்கப்பட்டது.

S. Manoharan
06/03/2020
[S. MANOHARAN]
DSP (V&Ac)
Thanjavur